DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 237/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : முத்துகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th **June 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் மேலஅழகுநாச்சியார்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஆடு மேய்க்கும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அல்ல. அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 08.04.2011 ம் தேதி இரவு 19.00 மணிக்கு சங்கரன்கோவில் மாதாங்கோவில் தெரு தீபம் எலக்ட்ரிக்கல்ஸ் முன்பு வைத்து தெரு லைட் வெளிச்சம் மற்றும் பேட்டரி லைட் வெளிசத்தில் சங்கரன்கோவில் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் நிலைய குற்ற எண். 233/11 இ.த.ச. பிரிவு 379 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றப்புறங்களையும் என் முன்பிற்கும் பாலசுப்பிரமணியன் என்பவர் முன்பிற்கும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நான் கையெழுத்திட்டேன் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**